[1984 மார்ச் 27

இருக்கிறது. அப்படி விரிவுபடுத்தும்போது மேலும் ஏறத்தாழ 22 வட்டங்கள் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டு சலுகைகள் பெற தகுதி உடையவை ஆகும். அப்படி அறிவிக்கப்படவிருக்கிற வட்டங்களில் பள்ளிப்பட்டு வட்டம் வருமா, அதற்குப் பொருந்துமா என்பதை ஆராய்ந்துப் பார்த்து, அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் எந்த எந்த வட்டங்கள் பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ''பிரையாரிட்டி இன்டஸ்ட்ரீஸ்'' என்று சொல்லப்படுகின்ற எலெக்ட்ரானிக்ஸ், ஷெட்யூல்டு டிரக்ஸ், ஆட்டோமோபைல் ஆன்சிலரி இன்டஸ்ட்ரீஸ், சோலார் எனர்ஜி பேஸ்டு இன்டஸ்ட்ரீஸ் போன்றவை எந்தப் பகுதியில் ஆரம்பித்தாலும் அவற்றிற்கு சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. மதுராந்தகம், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி வட்டங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

போளூர் ஒன்றியத்திலுள்ள படைவீடு, கேசவபுரம் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.

*475—(வினா எண் 7234) திரு. இல. பலராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு போளூர் ஒன்றியப் படைவீடு, கேசவபுரம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

(ஆ) இதன் பேரில், எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆணைப் பிறப்பிக்கவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.